इंडिया रिसर्व வங்கி

इந்திய ரிசர்வ் வங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

ஜூன் 22, 2016

**"சுவாமி சின்மயானந்தா பிறந்ததின நூற்றாண்டுவிழா"வைச் சிறப்பிக்கும் வகையில் ₹. 10 நாணயங்கள் வெளியீடு**

இந்திய ரிசர்வ் வங்கி, "சுவாமி சின்மயானந்தா பிறந்ததின நூற்றாண்டுவிழா"வைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தினால் வெளியிடப்படும் ₹. 10 மதிப்பிலக்க நாணயங்களை விரைவில் புழக்கத்தில் விடுகிறது.

இந்த நாணயங்களின் வடிவமைப்பு பற்றிய விபரங்களடங்கிய அறிக்கையை ஏப்ரல் 30, 2015 தேதியிட்ட அரசிதழில் - அசாதாரண - பகுதி - பிரிவு - பிரிவு 1 - எண் 274, நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

**முன்புறம்:**

நாணயத்தின் மத்தியில் அசோகா தூணின் சிங்க முகமும் அதற்குக் கீழ் **'सत्यमेव जयते'** என்ற வாசகம் இந்தியிலும் பொறிக்கப்பட்டிருக்கும். இதன் இடப்பக்கம் **'भारत'** என்று தேவநாகரியிலும், வலப்பக்கம் **'INDIA'** என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும். சிங்கமுகத்தின் கீழ் பகுதியில் **"₹"** என்ற ரூபாய் குறியீடும், மதிப்பிலக்கம் **10** என்பது சர்வதேச எண் அளவிலும் பொறிக்கப்பட்டிருக்கும்.

**பின்புறம்:**

நாணயத்தின் மறுபக்கம் **"சுவாமி சின்மயானந்தா"-வின்** உருவப்படம் மத்தியில் பொறிக்கப் பட்டிருக்கும். உருவப்படத்தின் மேற்புறம் **"स्वामि चिन्मयानंद की जन्मशती"** என்று தேவநாகரியிலும் மற்றும் **"BIRTH CENTENARY OF SWAMI CHINMAYANANDA"** என்று கீழ்ப்புறத்தில் ஆங்கிலத்திலும் முறையே எழுதப்பட்டிருக்கும். மேலும் சுவாமி சின்மயானந்தாவின் உருவப்படத்தின் கீழ் **"2015"** என்று ஆண்டு சர்வதேச எண்களில் பொறிக்கப்பட்டிருக்கும் .

**2011**-ஆம் வருடத்திய இந்திய நாணயச் சட்டத்தின்படி, இந்த நாணயங்கள் செல்லத்தக்கவை. ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் இந்த மதிப்பிலக்க நாணயங்களும் செல்லத்தக்கவையே.

(அஜித் பிரசாத்)
பொது மேலாளர்

பத்திரிக்கை வெளியீடு - **2015-2016/2974**